KTEJ 2023 01(1): 37 - 53 Kolumpu Tamil E-Journal (KTEJ)

Volume 01, Issue I, 2023

# சமூக உளவியலில் கேர்ட் லெவின் (Kurt Lewin) ஆற்றிய பங்களிப்புக்கள் - ஒரு மதிப்பீடு

எம். றிஸ்வான்
சமூகவியல் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
mriswan2008@seu.ac.lk

## சுருக்கம்

உளவியல் ஆராய்ச்சி பரந்தளவில் விருத்தியடைந்துள்ள இந்த நூற்றாண்டில் சமூக உளவியல் எனும் பிரத்தியேகப் பகுதியின் முக்கியத்துவம் சமூகவியலில் அதிகம் உணரப்பட்டுள்ளது. சமூகத்தைப் பிரதான ஆய்வுகூடமாகக் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபடும் சமூகவியல் துறையானது, உள-சமூக நடத்தை குறித்தும் ஆராய்வது அவசியம் என பல்வேறு நியாயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் மனித நடத்தையைப் பல்வேறு கோணங்களில் அணுகும் தன்மைவாய்ந்த சமூகவியலானது, அதன் முக்கிய கற்கைப் பரப்பில் சமூக உளவியல் பற்றியும் அதன் விருத்தி, முக்கியத்துவம் குறித்தும் பேசியுள்ளது. இக்கட்டுரையில் சமூக உளவியல் எனும் வரையறை குறுகிய கண்ணோட்டத்திலும் சமூக உளவியலுக்குக் கேர்ட் லெவின் ஆற்றிய பங்களிப்பு மிகப் பரந்த அடிப்படையிலும் நோக்கப்பட்டுள்ளன. கேர்ட் லெவின் சமூக உளவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக் குறித்து ஆராய்வதை பிரதான நோக்கமாக கொண்டமைந்த இக்கட்டுரையானது, இரண்டாம் நிலைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, லெவினின் வாழ்வியல் பின்னணி, கல்விப் பின்புலம், உளவியல் மற்றும் சமூக உளவியல் துறைகளின் வளர்ச்சியில் அவர் ஆற்றிய பங்களிப்புக்களை விரிவாக ஆராய்ந்து விவரித்துள்ளது. இக்கட்டுரையின் பிரதான கலந்துரையாடல்கள் அனைத்தும் விவரிப்பு முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. சமூக உளவியல் துறையின் ஸ்தாபகத் தந்தை என அங்கீகரிக்கப்பட்ட கேர்ட் லெவின் குறித்தும் அவரின் பங்களிப்புக்கள் பற்றியும் இக்கட்டுரை விபரமாக எடுத்துக்கூறுவதானது, சமூக உளவியல் கற்கின்ற ஒவ்வொருவருக்கும் கேர்ட் லெவின் குறித்தும் அவரின் அறிவியல் பங்களிப்புக் குறித்தும் புரிந்துகொள்ளக்கூடிய அடிப்படையில் தகவல்களை வழங்கியுள்ளது. அத்துடன் இத்தகைய ஆய்வுகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள இருப்பவர்களுக்கு இக்கட்டுரை ஒரு துவக்கமாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** *கேர்ட் லெவின், சமூக உளவியல், கள கோட்பாடு, தலைமைத்துவம், செயன்முறை ஆய்வு.*

## 1. அறிமுகம்

பொதுவாக உளவியலின் அண்மைய போக்குகள் எவ்வாறு உள்ளன என்பதை சமூகவியலாளர்கள் ஆராய வேண்டும் என்பதற்குப் பல நியாயங்கள் உள்ளன. பாரம்பரியமாக உளவியலாளர்களில் அதிகமானோர் ஒரு தனிநபரின் உயிரியல் பண்புக்கூறுகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தினர். எனினும் அண்மைக்காலமாகப் பெரும்பாலான உளவியலாளர்கள் இவ்வாறு உடலியல் ரீதியாக பார்வை செலுத்துவதைக் கைவிட்டுள்ளனர். ஏனெனில், உடலியல் உண்மைகளை (physiological facts) விட, சமூகம் சார்ந்த உண்மைகளே (social facts) உளவியலுக்கு அவசியம் எனும் யதார்த்தத்தை உளவியல் ஆய்வாளர்கள் புரிந்துகொண்டு அங்கீகரித்துள்ளனர் (Lewin, 1939). ஒவ்வொரு தனிநபரினது வாழ்வின் எல்லா நிலைகளிலும் சமூகச் செல்வாக்கு உள்ளீர்க்கப்படுவதும் அத்தகைய செல்வாக்கு மூலம் தனிநபரின் செயற்பாடுகளில் தீர்மானம் எடுக்கப்படுவதும் இயல்பானதாகும். இத்தகைய யதார்த்தத்தை பண்பாட்டு மானிடவியல் (cultural anthropology) பரிசோதனை உளவியல் (experimental psychology) ஆய்வு முடிவுகள் ஆதாரத்துடன் முன்வைக்கின்றன.

சமூகவியல் கற்கைப் பரப்பில் ஒரு முக்கியமான கிளைக் கற்கையாகவே சமூக உளவியல் (social psychology) காணப்படுகின்றது. இது நாம் வாழும் சமூகத்தில் காணப்படும் மக்களை உளவியல் ரீதியாக ஆராய்வதைக் குறிக்கின்றது. அதாவது, மனிதர்களின் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நடத்தைகள் என்பன சமூகச் சூழலுக்கு ஏற்ப எவ்வாறு வடிவமைக்கப்படுகின்றன என்பதை ஆராயும் (உளவியலும் சமூகவியலும் இணைந்த) ஒரு பாடப்பரப்பாக சமூக உளவியல் அமைந்துள்ளது. இந்தப்பின்னணியில், இக்கட்டுரையானது நவீன சமூக உளவியலின் தந்தையாகக் கருதப்படும் உளவியலாளரான கேர்ட் லெவின் (Kurt Lewin) சமூக உளவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக் குறித்து ஆராய்ந்துள்ளது. லெவினின் வாழ்வியல் பின்னணி, கல்விப் புலமை, அறிவியல் ஆராய்ச்சி, உளவியல் மீதான ஈடுபாடு, சமூக உளவியல் மீதான விசேட பங்களிப்பு மற்றும் உளவியல் உலகில் செல்வாக்கு மிக்கதாகத் திகழும் அவரின் பிரதான கோட்பாடுகளின் அடிப்படைப் படிமங்கள் என்பன இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

### 1.1 நோக்கம்

சமூக உளவியலுக்கு கேர்ட் லெவின் ஆற்றிய பங்களிப்புக் குறித்து ஆராய்வதை இக்கட்டுரை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன், லெவினின் வாழ்வு, பின்னணி, கல்விப் புலமை, அறிவியல் ஆராய்ச்சி, கோட்பாட்டு உருவாக்கம் மற்றும் ஏனைய உளவியல் பணிகள் பற்றி தெளிவுபடுத்துவதைத் துணை நோக்காகக் கொண்டும் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## 2. முறையியல்

அடிப்படையில் இது ஒரு விவரிப்பு முறையில் அமைந்த மதிப்பீட்டு ஆய்வாகும். இக்கட்டுரைக்குத் தேவையான தகவல்கள் அனைத்தும் இரண்டாம் நிலை மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. பிரசுரிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இதில் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, கேர்ட் லெவின் பற்றிய பின்னணி, கல்வி மற்றும் ஆய்வு சார் விபரங்கள், மற்றும் சமூக உளவியல் துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் அனைத்தும் பெரும்பாலும் ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் மற்றும் இணையத்தள வெளியீடுகள், கட்டுரைகள் என்பவற்றிலிருந்து பயன்படுத்தப்பட்டுள்ளன. லெவினின் வாழ்வியல் முதல் சமூக உளவியல் வளர்ச்சியில் மேற்கொண்ட பங்களிப்புக்கள் மற்றும் உளவியல் மரபில் லெவின் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் விவரிப்பு முறையில் இக்கட்டுரையில் கலந்துரையாடப்பட்டுள்ளன. முழுக்க முழுக்க பண்பு ரீதியான விவரிப்பு முறைமையே இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளதால், எண்ரீதியான பகுப்பாய்வுகளோ புள்ளிவிபரப் பிரயோகங்களோ இக்கட்டுரையில் இடம்பெறவில்லை. விவரிப்பு

முறையில் அமைந்த இக்கட்டுரை சமூகவியல், உளவியல் மற்றும் சமூக உளவியல் துறைகளில் ஒரு முக்கிய பங்களிப்புச் செலுத்துக்கூடிய முயற்சியாக அமைந்துள்ளது.

## 3. முன்னைய ஆய்வுகள் மீதான கண்ணோட்டம்

பேர்னஸ் (Burnes, 2020), தனது ஆய்வில், கேர்ட் லெவினின் மாற்றத்திற்கான கோட்பாட்டின் மூன்று முக்கிய படிநிலைகள் பற்றி விவரித்துள்ளார். அதில் முக்கியமாக, உளவியல் உலகில் பிரபல்யமாகப் பேசப்படும் களக் கோட்பாடு (field theory) மற்றும் மூன்று படிநிலைகளைக் கொண்ட மாதிரி (three stage model) பற்றியும் செயற்பாட்டு ஆய்வு (action research) அதன் படிநிலைகள், குழு இயங்கியல் (group dynamic) போன்ற விடயங்களை விவரித்தும் கூறியுள்ளார். லெவினின் இரண்டு முக்கிய ஆய்வுக் கட்டுரைகள் மீதான மீளாய்வு விசேட கவனம் செலுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளதுடன், செயற்பாட்டு ஆய்வு பற்றிய பூரண விவரிப்பும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

அதேபோன்று, பேர்னஸ் மற்றும் பார்கல் (Burnes & Bargal, 2017) என்போர் தமது ஆய்வுக் கட்டுரையில் கேர்ட் லெவினின் வாழ்வியல் பற்றியும் குடும்பப் பின்னணி, கல்வி மற்றும் ஆய்வு வரலாறு, ஆய்வுப் பணிகள், கோட்பாட்டு ரீதியான பங்களிப்புகள் குறித்த மதிப்பீட்டினை மேற்கொண்டுள்ளனர். குறிப்பாக லெவினின் களக் கோட்பாடு, மாற்றத்தின் கோட்பாடு (change theory) போன்றன மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.

பில்லிக் (Billig, 2015) மேற்கொண்ட நூலாய்வு, சமூக உளவியல் நூல்கள் எவ்வாறு கேர்ட் லெவினைப் பற்றியும் அவரது சமூக உளவியலுக்கான பங்களிப்புக்கள் குறித்தும் பேசியுள்ளன என்பதை ஆழமாக நோக்கியுள்ளது. ஆய்வுகளை விஞ்ஞான முறையில் மேற்கொள்ளவும் பரிசோதனை முறைமைகளை பயன்படுத்தவும் தேவையான வழிகாட்டல்களை எவ்வாறு சமூக உளவியல் தொடர்பான நூல்கள் முன்வைத்துள்ளன என்பதை இக்கட்டுரை மீளாய்வுக்கு உட்படுத்தியுள்ளது. சமூக உளவியலின் பங்களிப்பு குறித்து மேற்கொள்ளப்பட்ட மிக ஆழமான நூலாய்வாக இது நோக்கப்படுகின்றது. லெவினின் சமூக உளவியல் பங்களிப்புக் குறித்த மீளாய்வில் அதிகமான நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் பெறுபேறுகள் கலந்துரையாடல்கள் என்பன தர்க்க ரீதியிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கொக்லான் மற்றும் ப்ரான்னிக் (Coghlan & Brannick, 2003) ஆகியோர் மேற்கொண்ட ஆய்வு 'கேர்ட் லெவின் ஒரு பிரயோகக் கோட்பாட்டாளர்' எனும் தலைப்பில் அமைந்திருந்தது. இதில் லெவினின் பின்னணி மற்றும் பங்களிப்புக்கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், கோட்பாடுகள் ஒவ்வொன்றையும் லெவின் எவ்வாறு நடைமுறைப் பிரயோகமுள்ளதாக மாற்றினார் என சுட்டிக்காட்டியுள்ளனர். 21ஆம் நூற்றாண்டில் சிறந்த உளவியலாளராக லெவின் கருதப்பட்டமைக்கு அவர் மேற்கொண்ட அறிவியல் பங்களிப்புக்கள் எவ்வாறு காரணமாய் அமைந்தன என்பனவும் இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளதனை அவதானிக்கலாம்.

அடெல்மேன் (Adelman, 1993), லெவினின் செயற்பாட்டு ஆய்வு பற்றித் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளதுடன், லெவினைப் பின்தொடர்ந்து வந்த உளவியல் ஆய்வாளர்கள் அல்லது லெவினிய சிந்தனையாளர்கள் செயற்பாட்டு ஆய்வு தொடர்பான கருத்துக்களை எங்ஙனம் தமது ஆய்வுகளில் பயன்படுத்தினர் என விவரித்துள்ளார். மேலும் லெவின் முன்வைத்த ஆய்வு முறைமைகள் எத்தகைய அடிப்படையில் அத்தகைய ஆய்வாளர்களுக்கு உதவியது என்பதை இக்கட்டுரை நன்கு தெளிவுபடுத்தியுள்ளது. குறிப்பாகப் பங்கேற்பு ஆய்வுக்கு (participatory research) எப்படி லெவினின் கோட்பாட்டு மாதிரிகளும் எண்ணக்கருக்களும் உதவின என்பது அடல்மேனின் கட்டுரையில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது.

லெவின் (Lewin, 1939) வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில் களக் கோட்பாடு மற்றும் சமூக உளவியலில் களக் கோட்பாடும் பரிசோதனையும் எவ்வகையில் முக்கியம் பெறுகின்றன

என்பதை விளக்கியுள்ளார். அத்துடன் களக் கோட்பாடு பற்றிய தெளிவான புரிதல் இக்கட்டுரை மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், சமூக உளவியல் பரிசோதனைகள் குறித்த எண்ணக்கரு விளக்கம் மற்றும் ஆய்வு முறைமைகள் பற்றி விஞ்ஞான நுட்ப முறையின் அடிப்படையில் ஆய்வாளர் விளக்கியுள்ளார். களக் கோட்பாடு பற்றிய பிரதான கலந்துரையாடல் இதில் முழுமையான விவரிக்கப்பட்டுள்ளது. சமூக உளவியலில் களக் கோட்பாட்டின் பிரயோகம், அதன் படிமுறைகள், வகைகள் போன்றன நடைமுறை உதாரணங்கள் ஊடாக விவரித்துள்ளமையை இதில் அவதானிக்க முடிகின்றது. லெவின், தனது ஆய்வில் குழு நடத்தை மற்றும் குழு இயங்கியல் தொடர்பான விவரிப்புக்களை கெஸ்டால்ட் பின்னணியில் நின்று நோக்கியுள்ளமை மிக முக்கிய ஒன்றாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது சமூக உளவியல் பங்களிப்புக்கள் அனைத்துக்கும் ஓர் அடிப்படை மூலமாகவும் அமைந்துள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட கட்டுரைகள் பெரும்பாலும் லெவினின் பரந்துபட்ட கோட்பாடுகள் அதன் வகைகள் பற்றி அதிகம் எடுத்துக்கூறியுள்ளன. எனினும் சமூக உளவியல் ஆய்வுகள் இடம்பெற்ற அளவுக்கு அதன் வளர்ச்சியில் லெவின் போன்ற ஆய்வாளர்கள் மேற்கொண்ட பணி குறித்த ஆய்வுக் கட்டுரைகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன. அதிலும் குறிப்பாக தமிழ்மொழியில் இத்தகைய பங்களிப்பு மிக மிகக் குறைவு எனும் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் ஒரு முயற்சியாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## சமூக உளவியல் (Social Psychology)

சமூகவியலானது சமூகத்தைப் பற்றி ஆராய்கின்ற சமூக விஞ்ஞானக் கற்கைநெறியாகும். சமூகத்தையும் அதன் கட்டமைப்பு, செயற்பாடுகள், மற்றும் மனிதனின் சமூக நடத்தையுடன் தொடர்புபட்ட எல்லா விவகாரங்களையும் தெளிவாக அறிகின்ற ஒரு விஞ்ஞானக் கற்கையாக சமூகவியல் வரையறை செய்யப்படுகின்றது. மனித நடத்தை என்பது சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு அம்சங்களுடன் தொடர்புபட்டுக் காணப்படுவது போலவே உளவியல் சார்ந்த விடயங்களுடன் இணைந்ததாக மனித நடத்தை அமைகின்றது. தனிப்பட்ட, குடும்ப, குழு சார்ந்த செயற்பாடு மற்றும் சமூகம் சார்ந்த நடத்தை என்று விரிந்து செல்லும் சமூக செயற்பாடானது உளவியல் காரணிகளின் தாக்கத்திற்கு உட்படுவது இயல்பானது. இத்தகைய உள-சமூகம் சார்ந்த விடயங்களைத் தனியே எடுத்தாராய உருவாக்கப்பட்ட தனிப்பெரும் துறையே சமூக உளவியல் (Social Psychology) ஆகும்.

உளவியலில் ஆராயும் அடிப்படை அம்சங்கள் ஒவ்வொன்றும் சமூக, பண்பாடு, உள-சமூக அடிப்படையில் நோக்கிப் பார்க்கப்பட வேண்டிய தேவை சமூகவியலாளர்கள், மானிடவியலாளர்கள் மற்றும் உளவியலாளர்கள் மத்தியில் எழுந்தது. இத்தேவையைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் சமூகவியல் மற்றும் உளவியல் ஆகிய இரு துறைகளின் பிணைப்புடன் உருவாக்கப்பட்ட ஒன்றே சமூக உளவியலாகும். சமூகவியல் கொண்டுள்ள பெரும் பிரிவுகளுள் ஒன்றாக இந்த சமூக உளவியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் சமூக உளவியல், சமூகவியலுக்கும் உளவியலுக்கும் இடையிலான பாலமாக காணப்படுகின்றது. தனிமனித சிந்தனை, உணர்வு, நடத்தை மீது ஏனைய நபர்கள் அல்லது குழுக்கள் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பது பற்றி விளக்குகின்ற ஒரு விஞ்ஞானமாக சமூக உளவியல் காணப்படுகின்றது (Myers, 1993; Baron, Branscombe, Byrne & Bhardwaj, 2014).

இங்கு தனிமனிதர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப எவ்வாறு செயற்படுகிறார்கள், சிந்திக்கின்றார்கள், உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள், மற்றும் அவற்றை நிர்ணயிக்கும் காரணிகள் போன்றவற்றை ஆராய்ந்து விளக்குவதாக சமூக உளவியல் காணப்படுகின்றது. பொதுவாக மனித நடத்தையைச் சமூகத்தோடு ஆராய்வது சமூக உளவியல் என கூறமுடியும். மற்றும், சமூக உளவியல் சமூகத் தாக்கங்கள் பற்றி நோக்குவதோடு மட்டும் நின்றுவிடாமல் அது சமூகத்தின் நோக்கம் மற்றும் சமூகத் தொடர்பு, சமூக நடத்தைகள் என்பவற்றைப் புரிந்து

செயல்படுவதிலும் முக்கிய பங்காற்றுகின்றது. அதாவது, உளவியல் ரீதியான கற்கை முறைகளுடன் சமூக உறவுகளைப் புரிந்து கொண்டு, சமூகத் தாக்கங்கள், மாறிகள் என்பன எவ்வாறு தனிநபரின் ஆளுமையை உருவாக்குகின்றது அல்லது வடிவமைக்கிறது என்பதை நோக்கி ஆராயும் ஒரு துறையாகச் சமூக உளவியல் செயற்படுகின்றது (Cherry, 2020a).

மனித இடைவினைகள் பற்றி ஆராய்கின்ற விஞ்ஞானக் கற்கைநெறியாக சமூக உளவியல் காணப்படுகின்றது. சமூக உளவியல் என்பது, சமூகச் சூழ்நிலையில் மனிதர்களின் நடத்தை, புலக்காட்சி, கற்றல், சிந்தனை, உணர்வு என்பன எவ்வாறு ஏனையவர்களின் செல்வாக்குக்கு உட்படுகின்றது என்பதைப் பற்றி ஆராய்கின்ற முறையான கற்கை நெறியாகும் (Introduction to Social Psychology: Kurt Lewin & Modern Uses, 2011). அதேபோன்று, சமூக உளவியல் பற்றி கோர்டன் அல்போர்ட் (Gordon Allport, 1985, cited in: Franzoi, 2006) கூறுகையில், 'சமூக உளவியல் என்பது தனிமனித சிந்தனைகள், உணர்வுகள், நடத்தைகள் என்பவை ஏனைய மனிதர்களினால் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தப்படுகின்றது என்பதை அறிகின்ற ஒரு விஞ்ஞானமாகும்' (Franzoi, 2006; Hodgetts, Drew, Sonn et.al., 2010; Riswan, 2021; & Malim, 1997). கிம்போல் யங் (Kimball Young) 'மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் இடைவினை மேற்கொள்வதனை ஆய்வு செய்வதே சமூக உளவியல் ஆகும். அவ் இடைவினையூடாக தனிமனிதர்களின் சிந்தனைகள், உணர்ச்சிகள், மனவெழுச்சிகள், நடத்தைகள் என்பவற்றில் ஏற்படும் தாக்கத்தையும் சமூக உளவியல் ஆய்வு செய்யும்' என்கின்றார். இன்னும் சிலர் கூறுகின்ற போது, 'சமூகச் சூழ்நிலை, சமூகக் காரணிகள் மனிதனை எவ்வாறு பாதிப்படையச் செய்கின்றது' என்பது பற்றி ஆராய்கின்றது என்கின்றனர் (Callaghan & Lazard, 2011; Crip & Tunner, 2010).

அதுமட்டுமன்றி, தனி மனிதச் செயற்பாடுகள் இடம் பெறும் சமூக உலகு பற்றியும் சமூக உளவியல் கவனம் செலுத்துகின்றது. சுருக்கமாகக் கூறப்போனால் சமூக உளவியலில் தனிநபர் நடத்தை பற்றிய கற்கையாக உள்ள அதேவேளை சமூக வாழ்வில் தனிநபர் நடத்தைகள், குழு நடத்தைகள் எவ்வாறு ஏனைய புறக்காரணிகளின் தாக்கத்துக்கு உட்படுகின்றன என்பதைப் பற்றி பேசுகின்றது. அத்துடன் தனிமனித சமூகப் பிரச்சினைகளை விளக்குவதுடன் அதற்கான தீர்வுகளை மேற்கொள்வது தொடர்பான அறிவினை பெற்றுக் கொள்வதிலும் சமூக உளவியலின் பங்கு இன்றியமையாததாக உள்ளது (Scientific World, 2019). இத்தகைய அடிப்படையில் காணப்படும் சமூக உளவியல் துறையானது வளர்ச்சியடையவும் வியாபித்து நிற்கவும் முன்னோடிகளாகப் பல்வேறு சிந்தனையாளர்கள் பங்காற்றியுள்ளனர். இக்கட்டுரையானது நவீன சமூக உளவியலின் தந்தை என பலராலும் கருதப்படுகின்ற கேர்ட் லெவின் பற்றியும் அவரது சமூக உளவியல் மீதான பங்களிப்பு, கோட்பாட்டுப் பின்புலம், ஆராய்ச்சியின் வீச்சு மற்றும் தற்கால சமூக உளவியலிலும் பொது உளவியலிலும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ள லெவினின் கோட்பாடுகள் செலுத்திய காத்திரமான பங்களிப்புக்கள் குறித்தும் ஆராய்வதாய் அமைந்துள்ளது (Baron et.al 2014).

## கேர்ட் லெவின் - பின்னணி

கேர்ட் லெவின் (Kurt Lewin) ஜெர்மன்-அமெரிக்க உளவியலாளர்களுள் ஒருவராவார். இவர் 1890 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி போலாந்து நாட்டின் மலிங்கோ (Molingo) மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில் நடுத்தர யூதக் குடும்பத்தில் பிறந்தார் (Marrow, 1977). இதனால் தனது ஆரம்ப யூத மரபுக்கல்வியை வீட்டிலே பெற்றுக்கொண்டார். பின்னர் 1905ஆம் ஆண்டு இவரது குடும்பம் பேர்லின் (Berlin) நகருக்கு இடம்பெயர்ந்ததுடன் அங்கு மனிதநேயம் தொடர்பான கற்கையை கைசேரியன் ஆகஸ்டா (Kaiserian Augesta) உடற்பயிற்சி கூடத்தில் பெற்றார்.

1909ஆம் ஆண்டு ப்ரைபேர்க் பல்கலைக்கழத்தில் (Frieberg University) மருத்துவம் பயின்று பின்னர் முனிச் பல்கலைக்கழகத்தில் (Munich University) உயிரியல் கற்பதற்காக சென்றார். இவ்வாறான காலப்பகுதியில் இவரது ஆர்வம் உளவியல் கற்கைகளின் மீது திரும்பியது. இதனால் ஜெர்மன் உளவியலாளரான கார்ல் ஸ்டம்ப்ட் (Carl Stumpt) உடன் தனது கலாநிதி (PhD) ஆய்வுக் கற்கையை தொடர்ந்தார். ஆனால் உலக யுத்தம் தீவிரமடைந்த காலப்பகுதியாகையால் இவரால் அதனை தொடர முடியவில்லை. எனினும் முதலாம் உலகப்போர் நிகழ்ந்தபோது லெவின் ஜேர்மன் நாட்டின் இராணுவத்தில் பணியாற்றினார் (Marrow, 1977). பின்னர் 1916ஆம் ஆண்டில் “ சங்கங்கள் (ஒழுங்கமைப்புக்கள்) தொடர்பான அடிப்படைச் சட்டங்கள்” (Basic law of association) என்ற தலைப்பில் ஆய்வறிக்கை சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1921இல் பேர்லின் பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் மற்றும் உளவியல் பாடத்திற்கான விரிவுரையாளராக செயற்பட்டார். பின்னர் 1932ஆம் ஆண்டு அமெரிக்காவிற்குக் குடியேறியதுடன் ஐயோவா பல்கலைக்கழகத்தில் (Iowa University) விரிவுரையாளராக கடமையாற்றினார் (Tietz, 2016).

1941ஆம் ஆண்டு சமூகப் பிரச்சினைகள் பற்றிய உளவியல் கற்கைக்கான சங்கத்தில் (Society for the Psychological Study of Social Issues - SPSSI) முக்கிய பங்கு வகித்ததுடன் அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சமூக உளவியல் என்பது தூய விஞ்ஞானத்திற்கும் (pure science) பிரயோக விஞ்ஞானத்திற்கும் (applied science) இடைப்பட்டது அல்லது தொடர்புடையது என்பதை உறுதியாக நம்பினார். லெவின் ‘ஆய்வுகள் இல்லாத செயற்பாடுகள்’ மற்றும் ‘செயற்பாடுகள் இல்லாத ஆய்வுகள்’ ஆகிய இரண்டுமே தற்கால பிரச்சினைகளுக்குச் சமூக உளவியலாளர்கள் தீர்வுகாண முற்படும்போது தொடர்ச்சியான தாக்கத்தை செலுத்துகின்றன என்பதை வலியுறுத்திக் கூறினார். சமூக உளவியலுக்கும் ஏனைய உளவியல் சார் கற்கைகளுக்கும் பல்வேறு பங்களிப்புக்களை மேற்கொண்ட லெவின் இறுதியாக மாரடைப்பு நோயின் காரணமாக 1947 ஆம் ஆண்டு தனது 57 வது வயதில் இறந்தார் (Jha, 2013). கேர்ட் லெவின் தொடர்பான சில முக்கிய நிகழ்வுகளும் காலங்களும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| **நிகழ்வுகள்** | **இடம்பெற்ற காலம்** |
|---|---|
| பிறப்பு நிகழ்ந்தமை | செப்டம்பர் 9, 1890 |
| ஜேர்மனிய இராணுவத்தில் இணைவு | 1914 |
| பேர்லின் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றது | 1916 |
| பேர்லின் பல்கலைக்கழகத்தின் உளவியல் நிறுவகத்தில் விரிவுரையாளராகியமை | 1921 |
| ஐக்கிய அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தமை | 1933 |
| ஐயோவா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகியமை | 1935 |
| மஸ்ஸசுசெற்ட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆய்வு நிலையத்தை நிறுவியமை | 1944 |
| 57வது வயதில் இறப்பு நிகழ்ந்தமை | பெப்ரவரி 12, 1947 |

Source: *Marrow, 1977*

**கெஸ்டால்ட் (Gestalt)**

கேர்ட் லெவின், கெஸ்டால்ட் கோட்பாட்டை விருத்தி செய்து அதனை மனித நடத்தையை ஆராய்வதற்குப் பிரயோகித்த போதுதான் கெஸ்டால்ட் உளவியலுக்கு அவரால் அதிக பங்களிப்பு செய்ய முடிந்தது. மனித நடத்தையை முறையாகப் பரிசோதித்து ஆய்வுகளை மேற்கொண்ட உளவியலாளர்களுள் லெவின் மிக முக்கியமானவராகக் கருதப்படுகின்றார். அத்துடன் பரிசோதனை உளவியல், சமூக உளவியல், ஆளுமை உளவியல் போன்ற ஆராய்ச்சித் துறைகளில் இவர் மிகவும் பிரபல்யமானவராகக் கருதப்படுகின்றார். மனித நடத்தையை விஞ்ஞான முறைமைகள் மூலமும் பரிசோதனை ஊடாகவும் ஆராய்கின்ற அணுகுமுறையை சமூக உளவியலில் முதன் முறையாக பயன்படுத்திய காரணத்தினால் தான் இவர் நவீன சமூக உளவியலின் தந்தை என எல்லோராலும் ஏற்கப்பட்டார். இவரின் இத்தகைய உளவியல் பங்களிப்புக்கள் அவரை 20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த உளவியலாளராக அங்கீகரிப்பதற்குக் காரணமாயின.

பொதுவாகவே கேர்ட் லெவின், கெஸ்டால்ட் உளவியலாளர் என்று அழைக்கப்படுகின்றார். ஏனெனில் கெஸ்டால்ட் அணுகுமுறையால் கவரப்பட்ட இவர் அதன் துணையுடன் களக் கோட்பாட்டை (field theory) உருவாக்கினார். களக் கோட்பாடானது மனித நடத்தையை ஆராய்கின்ற ஓர் அணுகுமுறை என்பதை மிக உருக்கமாக லெவின் கூறினார். நவீன சமூக உளவியலில் மிக அதிகமான தாக்கத்தை ஏற்படுத்திய கோட்பாடும் இதுவாகும். லெவினின் களக் கோட்பாடானது மனித நடத்தையை ஆராய்வதற்கு ஏற்ப தகுந்த முறைமைகள், பகுப்பாய்வு செய்யும் முறை, விஞ்ஞான முறையிலான கட்டமைப்பு என்பவற்றை கொண்டுள்ளது. இதனால் இக்கோட்பாடானது, பாரம்பரியமாகச் சமூக விஞ்ஞான ஆய்வுகள் கொண்டிருக்கின்ற எல்லைகளைக் கடந்து மிகவும் காத்திரமான அடிப்படையில் மனித நடத்தை குறித்து ஆராயவும் விவரிக்கவும் உதவுகின்றது. அத்துடன் களக் கோட்பாடு ஒன்றுக்கு மேற்பட்ட அதாவது, பல்துறைசார்ந்த அணுகுமுறைகளைக் (interdeciplinary approach) கொண்டுள்ளமை உளவியல் ஆராய்ச்சி மற்றும் உளவியல் வகைகளை புரிந்துகொள்வதற்கு ஏதுவாய் அமைகின்றது (Lewin, 1977). தற்காலத்தில்கூட சமூக விஞ்ஞான ஆராய்ச்சியில் ஒரு துறையானது வெறுமனே அதே துறைசார் ஆய்வுகளை மாத்திரம் மேற்கொள்வதைத் தவிர்த்து பல்துறைசார் ஆய்வுகளை அதிகம் ஊக்குவிக்கின்றன. உதாரணமாக சமூகவியல் ஆய்வு ஒரு சமூகப் பிரச்சினையை எடுத்தாராயும்போது அப்பிரச்சினை தொடர்பான பொருளியல், அரசியல் மற்றும் சூழலியல் காரணிகள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ரீதியான தாக்கங்கள் என பல்துறைசார் பெறுபேறுகளை முன்வைக்க விளைகின்றது. எனவே இன்று இயற்கை விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய இரு பெரும் துறைகளும் பல்துறை-மைய ஆய்வுகளை அதிகம் வரவேற்று அங்கீகரிக்கின்றன. அத்தகைய பல்துறைசார் அணுகுமுறைகளை லெவின் முன்வைத்திருப்பதானது அவரின் ஆழமான அறிவியல் பங்களிப்பை எடுத்தியம்புகின்றது.

**கேர்ட் லெவினின் பங்களிப்புக்கள் குறித்த மதிப்பீடு**

கேர்ட் லெவின் உளவியலாளர்களுள் மிகவும் செல்வாக்கு மிக்கவராக காணப்படுகின்றார் (Marrow, 1977). அத்துடன் இன்றைய நவீன சமூக உளவியலின் தந்தை எனவும் அங்கீகரிக்கப்படுகின்றார் (Kurt Lewin: Experiments, Theories & Contributions, 2018). இவரது பிரதான பங்களிப்புக்களான குழு இயங்கியல், அனுபவக் கற்றல் மற்றும் செயல்முறை ஆய்வு (group dynamic, experiential learning and action research) போன்றன சமூக உளவியல் துறையின் விருத்தி, மேம்பாடு என்பவற்றில் பாரிய செல்வாக்குச் செலுத்தின. அத்துடன் இவரின் பங்களிப்புக்கள் பிரயோக உளவியல் மற்றும் ஒழுங்கமைப்பு உளவியல் (applied psychology and organizational psychology) போன்ற துறைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக

அங்கீகரிக்கப்படுகின்றன. 2002ஆம் ஆண்டு மேற்கொண்ட, 20ஆம் நூற்றாண்டின் மிக ஆதிக்கம் செலுத்திய உளவியலாளர்கள் பற்றிய மதிப்பீட்டில் லெவின் 18வது மிக உயரிய உளவியலாளர் (18th most eminent psychologist) என தரவரிசைப்படுத்தப்பட்டார் (Lewin, 1935, cited in: Marrow, 1977).

1920களின் ஆரம்பத்தில், லெவின் பேர்லின் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். அப்போதிருந்த மிகவும் பிரசித்தி பெற்ற உளவியலாளர்களான வோல்ப்கங் கொலர் (Wolfgang Kohler) மற்றும் மக்ஸ் வேர்திமர் (Max Wertheimer) ஆகியோருடன் மிக நெருங்கிய முறையில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. 1930களின் ஆரம்பத்தில் லெவின் ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்றார். பின்னர் ஸ்டான்போர்ட், கோர்னல், மற்றும் மஸ்ஸசுசெற்ட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (Stanford, Cornell, and the Massachusetts Institute of Technology (MIT) ஆகியவற்றில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். மஸ்ஸசுசெற்ட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் கற்பித்துக் கொண்டிருக்கும்போது லெவின் குழு இயங்கியலுக்கான ஆய்வு நிலையத்தை (Research Center for Group Dynamics) நிறுவினார் (Wheeler, 2008). இதன் மூலம் குழுக்கள் பற்றிய சமூக உளவியல், பரிசோதனைக் கற்றல், செயன்முறை ஆய்வு, மற்றும் மனித நடத்தையுடன் தொடர்புடைய பல்வேறு மூலதத்துவங்களை இந்த உலகம் புரிந்து கொள்வதற்கு லெவின் உதவினார். அத்துடன், லெவின் மாணவர்களால் கவரப்படக்கூடியவராக, சமத்துவமாக நடக்கக்கூடியவராக, இலகுவில் அணுகக்கூடியவராக காணப்பட்டார். அவர் தனது வீட்டிலும் சிற்றுண்டிச் சாலையிலும் மாணவர்களுடன் சமனாக அமர்ந்து அவர்களுடன் மிக அதிக நேரங்களை செலவிடுவார். அப்போது மெய்யியல், உளவியல் மற்றும் நாளாந்தம் இடம்பெறக்கூடிய பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடுவார் (Coghlan & Brannick, 2003).

உலக மகா யுத்தங்களுக்குப் பின்னரான காலப்பகுதியில் சமூக உளவியல் துறையின் முன்னோடிகளாகக் காணப்பட்ட உளவியலாளர்களுள் கேர்ட் லெவின் ஒரு முக்கிய உளவியலாளராக அடையாளப்படுத்தப்படுகின்றார். இவர், பரிசோதனை உளவியல் (experimental psychology), சமூக உளவியல் (social psychology), ஆளுமை உளவியல் (personality psychology) என்பவற்றில் தாக்கம் செலுத்தும் மனித நடத்தைகளை முறையாக ஆய்வு செய்த உளவியலாளர்களுள் முதன்மையானவராகக் கருதப்படுகின்றார். குழு-இயங்கியல் (group dynamic), செயல்முறை ஆய்வு (action research) என்பன இவரது ஆராய்ச்சி முறையியலின் முக்கிய அங்கங்களாகக் காணப்பட்டன. அத்தோடு, சமூக உளவியலின் வளர்ச்சியில் லெவின் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் இவர் பண்பாட்டு உளவியல் மற்றும் ஒழுங்கமைப்பு உளவியல் கற்கைகளில் முன்னோடிகளுள் முக்கியமானவராகக் கருதப்படுகின்றார் (Cherry, 2020).

சமூக உளவியலின் தந்தை யார் என்பதை வரையறுப்பதில் பல்வேறு கருத்துக்களும் வாதங்களும் முன்வைக்கப்பட்டிருந்தும் கூட, பொதுவாகவே கேர்ட் லெவின் (1890-1947) சமூக உளவியலின் தந்தை என்று அழைக்கப்படுகின்றார் (Wheeler, 2008; Coghlan & Brannick, 2003). லெவினியக் கோட்பாட்டு மரபின்படி நோக்கும்போது ‘நடத்தை என்பது நபர்களினதும் சூழலினதும் செயற்பாடாகும்’ [Behavior is a function of the person and the environment, B = f (p, e)] என வரையறுக்கின்றனர். லெவின் உளவியலுக்கு ஆற்றிய பங்களிப்புக் குறித்து புரிந்துகொள்ள வேண்டுமெனில், முதலில் கெஸ்டால்ட் கோட்பாடு தொடர்பிலான லெவினின் தொடர்பு எவ்வாறு அமைந்திருந்தது என நோக்க வேண்டும். கெஸ்டால்ட், உளவியல் பிரிவுகள் எல்லாவற்றினதும் ஒரு அடிப்படை அம்சமாகக் காணப்படுகின்றது.

20ஆம் நூற்றாண்டில் சமூக விஞ்ஞானத் துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய சொற்ப எண்ணிக்கையிலான புலமையாளர்கள் மத்தியில் கேர்ட் லெவின் ஒரு முக்கிய ஆய்வாளராக உள்வாங்கப்படுகின்றார் (Coghlan & Brannick, 2003). லெவினின் சமூக உளவியலுக்கான

பங்களிப்புக்கள் குறிப்பாக, திட்டமிட்ட அடிப்படையில் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்குடன் முன்வைத்த கோட்பாடு மற்றும் நடைமுறை (theory and practice) என குறிப்பிடலாம் (Patnoe 1988 & Burke 2002, cited in: Coghlan & Brannick, 2003). லெவினின் செல்வாக்கானது இன்று, சமகால முகாமைத்துவம், தலைமைத்துவ வடிவங்கள், பங்கேற்பு முறைகள், ஆய்வுப் பின்னூட்டல் முறைகள், நிபுணத்துவத் திறன்கள், வேலைகளின் வடிவமைப்பு, குழு விருத்தி, பயிற்சி, மாற்றத்தின் கோட்பாடு மற்றும் செயற்பாட்டு ஆய்வு போன்றவற்றில் வியாபித்துள்ளதனைக் காணலாம் (Coghlan & Brannick, 2003).

இவர் உளவியலின் மீது கொண்ட அதீத ஈடுபாட்டின் காரணமாகத் தனது வாழ்நாள் காலப்பகுதியில் சமூக உளவியல் துறைக்கு இவர் ஆற்றிய பங்களிப்புகள் என்பவை குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியவை ஆகும். லெவினின் பங்களிப்புகள் சமூக உளவியல் ஆய்வில் அவரால் வெளியிடப்பட்ட கோட்பாடுகள் மூலம் அவர் எழுதிய புத்தகங்கள், கட்டுரைகள் என்பவற்றின் மூலமும் வெளிக் கொண்டுவரப்பட்டன. இவர் கோட்பாடுகளை முன்வைக்கும் போது அவற்றிக்குச் செயன்முறைப் பிரயோகம் என்பது அவசியமென வலியுறுத்திக் கூறினார் மற்றும் சமூக முறைமைகளில் இவருக்கு காணப்பட்ட ஆர்வம் சமூக உளவியல் ரீதியான ஆய்வுகளை முனைப்புடன் ஈடுபட தூண்டியது. யுத்த காலங்களில் அரசுக்கான வேலைகளில் ஈடுபடும் போது தனது ஆய்வுகளை யுத்த முயற்சிகளின் போதும் செயற்படுத்தி அவதானித்தார். இதனால் யுத்த வீரர்களின் மன உறுதியையும் மற்றும் யுத்தத்தினால் உண்டாக்கப்பட்ட உளவியல் ரீதியான விளைவுகள் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ள ஆர்வம் கொண்டார் (Segal, 1997). லெவின் அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்ததன் பின்னர் அங்குள்ள ஐயோவா பல்கலைக்கழகத்தில் (Iowa University) சிறுவர் நல நிலையத்தில் கற்பித்தார். மற்றும் 1946ஆம் ஆண்டு குழு இயங்கியல் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனராகவும் தனது இறுதி நாள் வரை செயற்பட்டார்.

இந்தவகையில் இவரால் குழு இயக்கவிலுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஆய்வு நிலையமே, சமூக உளவியல் ஆய்வு தொடர்பான விடயங்களில் மிகச்சிறந்த பங்களிப்பை மேற்கொள்ள உதவிய இடமாக காணப்படுகின்றது. லெவின் உளவியலுக்கான கொள்கைகளை விரிவுபடுத்தி அதனை மனித நடத்தையுடன் தொடர்புபடுத்தி அவதானித்தார். இவ்வாறு லெவின் சமூக உளவியலிற்காக வழங்கிய பங்களிப்பை இவரால் முன்வைக்கப்பட்ட பிரதான கோட்பாடுகள் ஊடாக விளங்கிக் கொள்ள முடியும். குறிப்பாக, கள கோட்பாடு (Field theory), குழு இயங்கியல் (Group dynamic), தலைமைத்து வடிவமும் நடத்தையும் (Leadership style and behaviour), ரீ - குழு கோட்பாடு (T- group theory) மற்றும் ஆய்வு முறைகள், மாற்றத்திற்கான கோட்பாடு (Change theory) ஆகியன சமூக உளவியல் பாடப்பரப்பில் எவ்வாறான பங்களிப்புகளை ஆற்றியுள்ளன என்பதை இனி நோக்க முடியும்.

## களக் கோட்பாடு (Field Theory)

களக் கோட்பாடானது உளவியல் மற்றும் சமூக விஞ்ஞான ஆய்வுகளில் கேர்ட் லெவினுடைய மிக முக்கிய பங்களிப்பாக அறியப்படுகின்றது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் காணப்பட்ட கெஸ்டால்ட் கோட்பாட்டின் (Gestalt theory) மீது லெவின் கொண்ட ஆர்வத்தினால் இந்த களக் கோட்பாடானது உருவாக்கப்பட்டது. கெஸ்டால்ட் கோட்பாடானது அதற்கே உரித்தான சட்டங்களுடன் முழுமையான ஒத்திசைவை கொண்டுள்ளது. இந்த கோட்பாடானது தனிமனிதனின் யதார்த்தத்தை விட கற்பனையை பற்றியே அதிகம் பேசுகின்றது (Lewin, 1935). மனித நடத்தைகள் பற்றி பேசுகின்ற கள கோட்பாடானது கெஸ்டால்ட் கோட்பாட்டைக் கொண்டே உருவாக்கினார் அல்லது விருத்தி செய்தார். கள கோட்பாடானது, ‘மனித நடத்தையை புரிந்துகொள்வது என்பது தனி நபர்களுக்கு இடையிலான தொடர்பிலும் உடலியல் மற்றும் சூழல் சார்ந்த உளவியல் புரிதலிலும் தங்கியுள்ளது’ என லெவின் குறிப்பிட்டுக் காட்டினார்.

இந்த கோட்பாட்டை விளக்குவதற்காக கணிதக் குறியீடுகளை பயன்படுத்தினார். அதாவது. B= f (p, e) இந்த சமன்பாட்டின் மூலம் இந்தக் கோட்பாட்டின் சாராம்சத்தை விளக்கியுள்ளார். இங்கு 'B' என்பது (சிந்தனை, மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்கிய) நடத்தை (Behavior) என்பதையும், 'f' என்பது தொழிற்பாடு அல்லது செயற்பாடு (function) எனவும் 'p' என்பது குறித்த நபர் (person) எனவும் 'e' என்பது வாழும் சூழல் (environment) எனவும் சுட்டிக்காட்டி தனது கோட்பாட்டை குறியீடுகளின் ஊடாக விவரித்துள்ளமை லெவினின் சிந்தனை வீச்சினைக் காட்டுகின்றது (Saxe, 2010).

ஒரு தனிநபரின் நடத்தை எப்போதும் ஒரு இலக்கையோ அல்லது செயற்பாட்டை நோக்கியோ செல்கின்றது. மனிதனின் இத்தகைய துல்லியமான நோக்கங்களும் அவற்றை அடைவதற்கான முயற்சிகளும் மனித நடத்தையின் வெளிப்பாட்டில் தங்கியுள்ளது என லெவின் வலியுறுத்தினார். இந்தச் செயற்பாடுகள் நேரடியாகவே களக் கோட்பாட்டைப் பின்பற்றுகின்றது. அத்துடன், தனிநபரின் சூழ்நிலை எவ்வாறு உளவியல் காரணிகளின் தாக்கத்திற்கு உட்படுகின்றது என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. இதன் மூலம் லெவின் ஒரு தனிநபரின் மனப்பாங்கு, நடத்தை என்பவற்றை மாற்றும் சக்தியாக எம்மைச் சூழவுள்ள நபர்கள், குழுக்கள் என்பன செயற்படுவதாகத் தனது ஆய்வின் மூலம் வெற்றிகரமான முறையில் நிரூபித்தார் (The Phychology Notes, 2021).

சில அறிஞர்கள் இவரது கோட்பாட்டை விமர்சிக்கும் போது இவரது கருத்தானது ஒரு கோட்பாட்டை காட்டிலும் அணுகுமுறையாக அல்லது எண்ணக்கருவாகக் காணப்படுகின்றது என கூறுகின்றார்கள். லெவின் குழந்தை வளர்ச்சி குறித்த ஒழுங்கமைக்கப்பட்ட விளக்கத்தை முன்வைக்கத் தவறி விட்டார் என்கின்ற குற்றச்சாட்டும் விமர்சனமும் அவரது களக் கோட்பாட்டுக்கு எதிராக எழுந்தமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

### குழு இயங்கியல் (Group Dynamic)

கேர்ட் லெவினின் குழு இயங்கியல் தொடர்பான ஆய்வானது சமூக உளவியல் துறையில் ஒரு முக்கிய கோட்பாடாக அமைகின்றது. நவீன பண்பாட்டுக்கு அவசியமான மானிடவியல் மற்றும் பண்பாட்டு மானிடவியல் கோட்பாட்டிற்கு இந்தக் கோட்பாட்டின் ஆய்வு முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது (Lewin,1935). குழு இயங்கியல் என்பது லெவினின் குழுக்கள் பற்றிய முதன்மையான பரிசோதனையாகக் காணப்படுகின்றது. மாற்றமடையும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தனிநபர் மற்றும் குழுக்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றி இவரின் இந்தக் கோட்பாடு பேசுகின்றது. குழு இயங்கியல் என்பது குழுக்களின் இயல்புகள் தொடர்பான அறிவை மேம்படுத்துவதுடன், நபர்களுக்கும் குழுக்களுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்புகள், ஏனைய குழுக்கள் மற்றும் பாரிய நிறுவனங்கள் போன்றவற்றைப் பற்றியும் விவரிக்கின்றது. இது பொது நோக்கத்தைக் கொண்ட குழு அங்கத்தவர்களின் உணர்வு மற்றும் உணர்ச்சியுடன் தொடர்புபடுகின்றது. லெவினின் இந்தக் கோட்பாட்டில் குழு என்பது திறந்த மற்றும் சிக்கலான அமைப்பு என்பதுடன், மற்றும் குழு நடத்தைகளின் பண்புகளில் உள்ளக மற்றும் வெளிப்புறக் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன எனக் குறிப்பிடுகின்றார் (Britannica, 2016; Gencer, 2019).

இந்தக் கோட்பாடானது வாழ்க்கையில் இடம்பெறுகின்ற உண்மைச் சம்பவங்களிலிருந்து ஆய்வுகளை மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது தப்பெண்ணங்களுக்கு எதிராகப் போராடுவதற்கு முயற்சிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது. இதனூடாக லெவினும் அவரது நண்பர்களும் முக்கிய மூன்று ஆராய்ச்சி பகுதியினை இதில் முன்னுரிமைப்படுத்தினர்.

1. குழு உறவுகளை மேம்படுத்த முயற்சிக்கும் சமூகத் தலைவர்கள் சமூகங்களுக்கிடையிலான செயல்திறனை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.
2. வெவ்வேறு குழுக்களுக்கிடையில் இருந்து வரும் நபர்களுக்கு இடையேயான தொடர்பினை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
3. சிறுபான்மைக் குழு அங்கத்தவர்களுக்கு மத்தியில் சொந்த உணர்வை ஏற்படுத்தக்கூடிய மற்றும் தன்னைச் சரிசெய்வதற்குரிய வழிகளை ஊக்குவிக்க வேண்டும். மேலும் தனிநபர் மற்றும் குழுக்களுக்கு இடையிலான சிறந்த உறவினைக் கட்டமைக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான பொறிமுறைகளைக் கையாளும்போது குழுக்களைப் பரஸ்பரம் இயங்கச் செய்வதற்கும் குழு இயக்கப்பாடு வினைத்திறன் உள்ளதாக அமைவதற்கும் வாய்ப்புள்ளது. மேற்குறித்த முயற்சிகள் குழு இயங்கியலில் பாரிய தாக்கம் செலுத்துவதாகவும் லெவினியச் சிந்தனையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மனிதச் செயற்பாடுகள் எப்பொழுதுமே புறச்சூழல் காரணிகளின் செல்வாக்கிற்கு உட்படுகின்றன என லெவின் குறிப்பிடுகின்றார். மேலும் களக் கோட்பாட்டின் மூன்று முக்கிய தத்துவங்களை லெவின் சுட்டிக்காட்டுகின்றார்.

1. நடத்தை என்பது தற்போதுள்ள களத்தின் (சூழலின்) செயற்பாடாகும்.
2. பகுப்பாய்வு என்பது சூழ்நிலையில் இருந்து தொடங்குகின்றது.
3. ஓர் உறுதியான சூழ்நிலையில் இயங்கும் ஓர் உறுதியான நபரைக் கணித ரீதியில் பகுப்பாய்வு செய்து குறிப்பிடலாம் என மூன்று அடிப்படை கோட்பாட்டுத் தத்துவங்கள் இங்கு லெவினினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

உண்மையில், களக் கோட்பாடு மனிதவள விருத்தி ஒழுங்கமைப்புத் தொடர்பில் விரிவாக நோக்குவதற்குப் பயன்படும் ஒரு முக்கிய கோட்பாடாகும். எனவே, மாற்றங்கள் நிகழக்கூடிய நிலை, அந்த மாற்றங்கள் இடம்பெறும் விதம், மாற்றங்கள் நிகழக் காரணம் எவை என்பவற்றைப் புரிந்துகொள்வதற்குக் களக் கோட்பாடு உதவுகின்றது என லெவின் சுட்டிக்காட்டுகின்றார். உண்மையில் இத்தகைய கோட்பாடு, சம காலத்திலும் சமூக ஒழுங்குமுறை, நடத்தை ரீதியான மாற்றம், சமூக மாற்றம் இடம்பெறுவதற்கான சூழல், சமூக மாற்றம் நிகழ வேண்டியதன் அவசியம் போன்ற பல்வேறு விடயங்களைச் சமூக விஞ்ஞானத் தளத்தில் நின்று ஆராய உதவுகின்றது எனலாம்.

## தலைமைத்துவ வடிவமும் நடத்தையும் (Leadership style and behavior)

1939ஆம் ஆண்டு கேர்ட் லெவினின் மற்றுமொரு முக்கிய பங்களிப்புகளில் தலைமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி காணப்படுகின்றது. இதன் மூலம் இவர் மூன்று முக்கிய தலைமைத்துவ வடிவங்களைச் சுட்டிக்காட்டினார். இவை தலைவர்கள் எவ்வாறு முடிவுகளை மேற்கொள்கின்றனர் என்பதைக் குறித்து நிற்கின்றது. சமூக உளவியல் துறையிலான பங்களிப்புகளில் இவரது இந்தக் கோட்பாடானது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உளவியல் கிளைகளில் ஒன்றாகக் கருதப்படும் ஒழுங்கமைப்பு உளவியலின் தலைமைத்துவ ஆளுமை, தலைமைத்துவம் தொடர்பான கட்டமைப்பு முறைமை என்பன இக்கோட்பாட்டின் வழி பகுப்பாய்வு செய்கின்றது.

லெவின் முன்வைத்த மூன்று தலைமைத்துவ வடிவங்களை நோக்குவோமானால், முதலாவது சர்வதிகார தலைமைத்துவமாகும் (Authoritarian leadership). இந்தத் தலைமைத்துவ முறையானது மக்கள் மத்தியில் தலைவர் மட்டுமே முழுமையான அதிகாரத்தைக் கொண்டிருப்பார். தலைவரே இங்கு தீர்மானங்களை மேற்கொள்வதுடன் அவரைப் பின்பற்றுவோர்

எந்தவொரு கேள்வியும் அவருக்கு எதிராகக் கேட்கமுடியாது, தலைவனின் கட்டளைகளை மக்கள் பின்பற்றுவார்கள் என்பதைக் குறித்து நிற்கின்றது. லெவினின் கருத்துப்படி, சர்வாதிகாரம் என்ற சொல் எதிர்மறையான அர்த்தங்களை வெளிப்படுத்துகின்ற போதிலும் இந்தத் தலைமைத்துவத்தைக் கொண்ட தலைவர்கள் எவ்வாறான சூழ்நிலைகளிலும் வெறுக்கத்தக்க சமூக சூழல்களை உருவாக்குவதில்லை என லெவின் வலியுறுத்துகின்றார் (Warbleton Council, 2021). லெவினின் அவதானிப்பின் படி, தலைமைத்துவம் புரட்சியை ஏற்படுத்துவதற்குத் துணைபுரிகின்றது என்பதாகும். அதாவது, புரட்சிகள் மூலம் மாற்றங்களைச் சமூகத்தில் ஏற்படுத்துவதற்கும் சமூகக் கட்டமைப்புக்களில் மாற்றங்களை உருவாக்குவதற்கும் தலைமைத்துவமானது தனித்து முடிவெடுக்கக்கூடிய சர்வதிகார போக்கில் அமைய வேண்டும் என குறிப்பிடுகின்றார். அத்துடன் மேற்குறிப்பிட்ட தன்மைகள் சர்வதிகார தலைமைத்துவத்தின் அடிப்படைப் பண்புகள் எனவும் லெவின் சுட்டிக்காட்டுகின்றார் (The Phychology Notes, 2021).

இரண்டாவது தலைமைத்துவ வடிவமாக ஜனநாயகத் தலைமைத்துவத்தை (Democratic leadership) எடுத்துக் காட்டுகின்றார். ஜனநாயகத் தலைமைத்துவம் என்பது தலைவர் தீர்மானம் எடுக்கும் முறைமைகளில் குழு அங்கத்தவர்களின் கருத்துக்களை உள்ளடக்குவதுடன் பெரும்பாலும் இங்கு இறுதி முடிவானது தலைவரினால் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு குறிப்பிட்ட குழுவின் தலைவர் முடிவுகளைப் பெற்றுக்கொள்ளக் குழு அங்கத்தவர்களின் ஈடுபாட்டை ஊக்கப்படுத்துவார். லெவினின் ஆராய்ச்சியின்படி, குழுக்களுக்கு மத்தியில் இந்தத் தலைமைத்துவ வடிவம் பயனுள்ள ஒன்றாகக் காணப்படுகின்றது. இருப்பினும் ஜனநாயக முறையிலான தீர்மானம் எடுத்தல் என்பது தாமதமான (மெதுவாக தீர்மானமெடுக்கும்) முறையாகக் காணப்பட்டாலும் இது நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு இந்த முறைமை உகந்ததல்ல எனவும் வாதிடுகின்றார். மேலும் இந்த ஜனநாயக தலைமைத்துவம் சர்வாதிகாரத்தில் இருந்து வேறுபட்ட பண்புகளை வெளிப்படுத்துகின்ற ஒரு முறைமை என்பதையும் லெவின் ஏற்றுக்கொண்டுள்ளார்.

மூன்றாவது தலைமைத்துவ வடிவத்தை லெவின், லைசெஸ் பையர் (Laissez – Faire) எனக் குறிப்பிடுகின்றார். அதாவது இது, இடைவினையுள்ள தொடர்பினைத் தலைமைத்துவம் வகிப்பவர்கள் கொண்டிருப்பதைக் குறிக்கின்ற பிரான்சு மொழிச் சொல்லாகும். இங்கு தலைவர் தீர்மானங்களை அவரைப் பின்பற்றுபவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பார். இந்தத் தலைமைத்துவ முறையானது திறமையான ஊக்கமுள்ள ஊழியர்களைக் கொண்டு முகாமைத்துவ தலையீடு இல்லாமல் சரியான திட்டங்கள் வகுக்கவும் முடிவுகளை எடுக்கவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் உதவுகின்றது என லெவின் கூறுகின்றார். இந்தத் தலைமைத்துவ முறையானது லெவினினால் சுட்டிக்காட்டப்பட்ட தலைமைத்துவ முறைகளில் செயல்திறன் குறைந்ததாகக் கருதப்படுகின்றது (Warbleton Council, 2021). லெவினின் ஆராய்ச்சியின் படி, இந்தத் தலைமைத்துவ வடிவங்களுள் ஜனநாயக தலைமைத்துவ வடிவமே வலுவான குழுச் செயற்பாடுகளில் சாதகமான தாக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை எடுத்துரைக்கின்றார் (Leadership Success, 2021).

தலைமைத்துவம் தொடர்பாக லெவின் முன்வைத்த கருத்துக்கள் அறிவியல் துறையில் ஒரு முக்கிய பங்களிப்பாகும். இத்தகைய அடிப்படையில்தான் தலைமைத்துவ வகைகள் குறித்து மக்ஸ் வெபர் எனும் அறிஞரும் தனது காத்திரமான பங்களிப்பைச செய்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும், மக்ஸ் வெபர் முன்வைத்த தலைமைத்துவம் தொடர்பான கருத்துக்கள் அரசியல் விஞ்ஞானம், சமூகவியல், பொதுத்துறை நிர்வாகம் போன்ற துறைசார் சாயலைக் கொண்டிருந்தாலும் லெவின் முன்வைத்த தலைமைத்துவ கருத்துக்கள் உளவியல் உலகில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. ஏனெனில், தலைமைத்துவ நெறிமுறையினை உள-சமூக ரீதியில் அணுகுவதற்கு லெவின் முன்வைத்த இக்கோட்பாடு பெரிதும் உதவக்கூடியதாக உள்ளமையைக் காணலாம்.

### ரீ-குழு கோட்பாடு (T-group theory)

லெவினினால் 1943 ஆம் ஆண்டு குழு கலந்துரையாடல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளல் தொடர்பான செயற்திட்டம் ரீ-குழு கோட்பாடு (T-group theory) என அறியப்படுகின்றது. இது நான்கு முக்கிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது என லெவின் சுட்டிக் காட்டுகின்றார். அதாவது பின்னூட்டல் என்பது ரீ-குழுக் கோட்பாட்டின் முக்கிய உள்ளடக்கமாகக் காணப்படுகின்றது. அடுத்து மாற்றம் அடையக் கூடிய நம்பிக்கைகளையும் மதிப்புகளையும் கொண்ட சூழலைப் பயிற்சியாளர்கள் உருவாக்க முற்பட வேண்டும். மூன்றாவதாகப் பங்கேற்பு மற்றும் கவனிப்பு என்பது குழு உறுப்பினர்கள் தாம் உணர்வுபூர்வமாகப் பங்கேற்பதுடன் பிறரையும் புறநிலையில் இருந்து அவதானிப்பதும் ஆகும். இறுதியான விடயமாக அறிவாற்றல் உதவி என்பது உளவியல் கற்கை, அறிவாற்றல் நடத்தை வெளிப்பாட்டின் மூலம் அபிவிருத்தி அடைவதாகும். இந்தக் கோட்பாடானது லெவினினாலும் அவரது சகாக்களாலும் குழு ஆய்வுகள் தொடர்பாக எளிதாக்கப்பட்ட அனுபவமாக சமூக உளவியலில் அடையாளப்படுத்துகின்றன.

### மாற்றத்திற்கான கோட்பாடு (Change theory)

லெவின் தனது ஆய்வு முறைமைகளில் மூன்று நிலைகளைக் கொண்ட மாற்றத்திற்கான மாதிரிகளை உருவாக்கினார். இது மாற்றத்திற்கான கோட்பாடு (change theory) என அடையாளம் காணப்படுகின்றது (Famous Psychologists, 2014). இந்த மாற்றத்திற்கான கோட்பாட்டின் மூன்று மாதிரிகளையும் தண்ணீரின் படிநிலைகளின் வடிவங்களை வைத்துப் பெயரிட்டுள்ளார். அதாவது, உறை நிலை (unfreeze), மாறும் நிலை (change), மற்றும் புதுப்பிக்கும் நிலை (refreez) எனும் மூன்று நிலைகளைக் குறிப்பிட்டுள்ளார் (Cummings, Bridgman & Brown, 2015). இதில் முதலாவது படிமுறையான உறை நிலையில், மாற்றம் நிகழப்போவது என்பதை மக்கள் உணர்ந்து கொள்வதைக் குறிக்கின்றது. இதன் போது மக்கள் மறுப்பு, பொறுமையின்மை, நிச்சயமற்ற தன்மை மற்றும் சந்தேகம் போன்ற வலுவான உணர்வுகளைக் கையாளுவர். அடுத்த படிமுறையான மாறும் நிலையில், உண்மையான சமூக மாற்றத்தினை மக்கள் உணர்ந்துகொள்வதனைக் குறிப்பிடுகின்றது. மிக முக்கியமாக இந்த மாற்றம் குறுகிய காலத்தில் செயற்படுவதுடன் குழப்பத்திற்கான காலமாகவும் காணப்படுகின்றது. மூன்றாவது படிமுறையான புதுப்பிக்கும் நிலையில், மக்கள் மாற்றத்தை உள்வாங்கிய புதிய நிலை ஆகும். இது மாற்றத்தினை ஏற்றுக்கொள்ளல் என்பதைக் குறிப்பிடுகிறது. இந்த மாற்றம் தொடர்பான கொள்கையை இன்றும் நிறுவன மாற்றத்திற்குப் பயன்படுத்தக்கூடியதாக உள்ளமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும் (Mulder, 2012).

இவ்வாறு மேலே எடுத்துக்காட்டப்பட்ட கோட்பாடுகள் சமூக உளவியல் பாடப்பரப்பில் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டன. எனினும் மாற்றத்துக்கான கோட்பாடு தொடர்பில், அது தனிநபர்கள், குழுக்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் மத்தியிலான இடைவினை விடயத்தில் பொறுப்புக் கூறலை குறைவாகக் கொண்டுள்ளதாகவும் மாற்றத்திற்கான செயற்பாடு மற்றும் மறுசெயல்முறை பற்றி விளக்குவதில் தோல்வி கண்டுள்ளதாகவும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன (Burnes, 2004). எவ்வாறெனினும் கேர்ட் லெவினின் கோட்பாடுகள் யாவும் சமூகத்தில் நாம் அடையாளம் காணக்கூடிய சமூகக் குழுக்கள், நிறுவன அமைப்புகள், செயற்பாடுகள், மனித நடத்தைகள், குழுக்களின் இயக்கநிலை பண்புகள், தலைமைத்துவம், தனி மனிதனின் ஆளுமை வளர்ச்சி, குழந்தை உளவியல் போன்ற பல முக்கிய அம்சங்களை ஆய்வுக்கு உட்படுத்துகின்றன. இந்தக் கோட்பாடுகளை இவர் விஞ்ஞானம், கணிதம் மற்றும் உளவியல் ரீதியான முறைகளைப் பயன்படுத்தி முன்மொழிந்துள்ளார். இவற்றின் மூலம் இவரின் சமூகவியல் பங்களிப்பு என்பது இன்றியமையாத ஒன்றாகச் சமூக உளவியல் பாடப்பரப்பில் அடையாளம் காணப்பட்டு வருகின்றது.

இவை மட்டுமல்லாமல் லெவினினால் எழுதப்பட்ட உளவியலுடன் தொடர்புடைய புத்தகங்களும் கட்டுரைகளும் இவரின் பங்களிப்புகளைப் பறைசாற்றும் விதமாக அமைந்துள்ளன. பல்வேறு உளவியல் சம்பந்தப்பட்ட புத்தகங்களை இவர் எழுதியதுடன் 80க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இதன்மூலம் இவர் சிறந்த எழுத்தாளராகவும் தன்னை நிருபித்துள்ளார். இவர் எழுதிய புத்தகங்களுள் ஆளுமையின் மாறும் கோட்பாடு (1935), கள உளவியலின் கோட்பாடுகள் (1936), சமூக அறிவியலின் களக் கோட்பாடுகள்: தேர்ந்தெடுக்கப்பட்ட தத்துவார்ந்த ஆவணங்கள் (1951), 1938ல் வெளியிடப்பட்ட உளவியல் சக்திகளின் கருத்தியல் பிரதிநிதித்துவம் மற்றும் அளவீடு, சமூக முரண்பாடுகளைத் தீர்ப்பது மற்றும் சமூக அறிவியலில் களக்கோட்பாடு (1997) என்பன முக்கிய நூல்களாக அடையாளம் காணப்படுகின்றன (Cherry, 2020). இந்த நூல்கள் தத்துவார்ந்த கருத்துக்களைக் குறிப்பிட்டு காட்டுவதுடன் புதிய ஆராய்ச்சித் திட்டங்களையும் உலகிற்கு வெளிப்படுத்தியதுடன் உண்மையான சமூகம் தொடர்பான கோரிக்கைகளையும் வெளி உலகிற்கு கொண்டு வந்தன. அவரது ஆய்வுக் கட்டுரைகளும் இவற்றில் முக்கிய பங்காற்றின. அத்துடன் இவரால் பூர்த்தி செய்யப்படாத புத்தகங்களும் ஆய்வுக் கட்டுரைகளும் லெவினின் மறைவிற்குப் பின்னர் அவரது மாணவர்களினால் பிற்காலத்தில் வெளியிடப்பட்டன. லெவினின் மாணவர்களான லியோன் பெஸ்டிங்கர் (Leaon Festinger), ஹரோல்ட் கெல்லி (Harold Kelly), மோர்டன் டேய்யுட்ஸ்ச் (Morton Deutsch), ஸ்டான்லி ஸ்சாச்டெர் (Stanley Schachter) ஜோன் திபாவ்ட் (John Thibaut) என்பவர்கள் பிற்காலத்தில் லெவின் உருவாக்கிய துறைகளில் முக்கிய பங்காளர்களாக தொழிற்பட்டவர்களாவர்.

### செயற்பாட்டு ஆய்வு (Action Research)

லெவின் முன்வைத்த செயற்பாட்டு ஆய்வு அணுகுமுறை நேரடியாகவே அவரது ரீ-குழு எண்ணக்கருவுடன் தொடர்புபட்டிருந்தது. இந்தச் செயற்பாட்டு ஆய்வு முறைமை 1940களில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆய்வு முறையியலில் மிக முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பாகப் பார்க்கப்பட்டதுடன், முக்கியமாகக் கைத்தொழில் மற்றும் கல்வி தொடர்பான ஆய்வுகளுக்கு இது பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டது. செயற்பாட்டு ஆய்வு என்பது ஒரு சுழற்சிமுறையில் அமைந்த ஒரு முறையியலாகும். இது மாற்றங்களை ஏற்படுத்தத் திட்டமிடல்களை மேற்கொண்டு, தரவுகளைச் சேகரித்துப் பரிசோதனைகளையும் மேற்கொண்டு பெறுபேறுகளை முன்வைக்கின்றது. இம்முறையியலானது ஆய்வாளனுக்கும் ஆய்வு செய்யப்படும் விடயத்துக்கும் இடையிலான ஆழமான உறவுநிலையை விளக்குகின்றது (Lewin, 1977) என லெவினின் இவ்வணுகுமுறை விவரிக்கின்றது. மனிதர்களின் செயற்பாடுகளை அறிவதற்கு, அவர்களே ஒழுங்கமைப்புக்களில் ஈடுபட்டு, பங்கேற்பினை மேற்கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற செயன்முறையாகச் செயற்பாட்டு ஆய்வு காணப்படுகின்றது.

செயற்பாட்டு ஆய்வில் பங்கேற்பு முறைமை முக்கியமானதாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் ஆய்வில் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஈடுபடும்போதுதான் ஆய்வின் பகுப்பாய்வு மதிப்பீடு என்பன வினைத்திறன் மிக்கதாக அமையும். லெவினின் காலத்திலிருந்து செயற்பாட்டு ஆய்வின் பல்வேறு அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய அணுகுமுறைகள் விஞ்ஞான ரீதியான முறைமையாக ஆரம்பத்தில் ஏற்கப்பட்டாலும் சில நேரங்களின் அதன் விஞ்ஞானத் தன்மை மீது பல கேள்விகள் எழுந்துள்ளன (Lewin, 1977; Coghlan & Jacobs, 2005). எப்படியிருந்தும், செயற்பாட்டு ஆய்வு முறையியல் குழுக்கள் அல்லது சமுதாயத்தினரின் ஈடுபாடு, சுய மதிப்பீடு, ஒருங்கிணைந்த நடத்தை, தீர்மானமெடுத்தலுக்கான வகிபாகம் போன்றன பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## 4. முடிவுரை

20ஆம் நூற்றாண்டின் புலமைத்துவ வரலாறு பற்றி எழுதும்போது, சமூக விஞ்ஞான மரபில் மாற்றங்களை ஏற்படுத்திய கேர்ட் லெவின் (1890-1947) மிக முக்கியமான உளவியலாளராக பதிவுசெய்யப்பட்டுள்ளார். கேர்ட் லெவின் சமூக உளவியலின் தந்தை என கருதப்படுகின்றார். இவர், மனிதனின் உள-சமூக நடத்தை (psycho-social behavior) மற்றும் குழு இயங்கியல் (group dynamic) பற்றி விளங்கிக்கொள்வதற்கான கெஸ்டால்ட் உளவியல் கோட்பாடுகளைப் (gestalt psychological theories) பயன்படுத்தி மனித நடத்தையையும் அதில் ஏற்படும் மாற்றங்களையும் தீர்மானிக்கக்கூடிய காரணிகள் பற்றி விளக்கினார். ஆரம்பத்தில் லெவின் நடத்தைவாதத்தைக் கற்பதில் அதிக ஆர்வம் காட்டினாலும் பிற்பட்ட காலங்களில் கெஸ்டால்ட் உளவியல் மீது அதிக ஈடுபாடு காட்டினார் (Marrow, 1977). கெஸ்டால்ட் உளவியல் கோட்பாட்டால் ஈர்க்கப்பட்ட இவர் அதனை விரிவுபடுத்தியதன் மூலம் அக்கோட்பாட்டைக் கொண்டு மனித நடத்தைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு மனித நடத்தையை முறையான ஆய்வுக்கு உட்படுத்திய முதல் உளவியலாளராக சமூக உளவியல் துறையில் அடையாளம் காணப்பட்டுள்ளார். ஏனெனில் இவர் தனது ஆய்வுகளில் அறிவியல் முறைகளையும் பரிசோதனை முறைகளையும் கொண்டு சமூக நடத்தையை கண்காணித்தார். இதனால் இவர் உளவியலின் வளர்ச்சிக்கு வித்திட்ட கோட்பாட்டாளராகவும் இருபதாம் நூற்றாண்டின் முக்கிய உளவியலாளராவும் மிளிர்கின்றார்.

கேர்ட் லெவின் ஒரு சமூக உளவியலாளராக இருந்து பல்வேறு அறிவியல் பங்களிப்புக்களை ஆற்றியுள்ளார் எனும் விடயம் மிக விபரமாக இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ளன. இவரது முக்கியமான பணிகளில் தலைமைத்துவ வடிவம் மற்றும் அதன் தாக்கங்கள், குழுவாகத் தீர்மானமெடுத்தல், களக் கோட்பாடு தொடர்பான விருத்தி, மாற்ற முறைமைக் கோட்பாட்டு மாதிரி, ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கான பிரயோக ஆய்வு முறைமை, குழு இயங்கியல் அணுகுமுறை போன்ற பங்களிப்புக்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன (Lewin, 1977). அதுமட்டுமன்றி லெவின் மாரடைப்பு நோயினால் இறக்கும் வரை (தனது கடைசிக் காலப்பகுதியில் கூட) சமூக உளவியல் சார்ந்த பல பண்புகளை அல்லது கோட்பாடுகளை, ஆய்வு முறைமைகளை வரையறுத்துக் கூறியிருந்தார் (Jha, 2013). மேலும், சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சமூக விஞ்ஞானிகள் தமது கோட்பாடுகளைப் பயன்படுத்த வேண்டிய கடமைப்பாடு உள்ளது என லெவின் வலியுறுத்தியும் வாதிட்டும் கூறியுள்ளார். இவரின் வாதத்தின் மீதிருந்த நியாயங்கள் பிற்பட்ட கால உளவியலாளர்களால் ஏற்கப்பட்டதுடன், லெவினின் கோட்பாடுகள் பல ரீதியிலும் பிரயோகிக்கப்பட்டும் வந்துள்ளன.

### உசாத்துணைகள்


Adelman, C. (1993) Kurt Lewin and the Origins of Action Research. *Educational Action Research*. 1(1): 7-24. DOI: 10.1080/0965079930010102

Baron, R.A., Branscombe, N.R., Byrne, D., amd Bhardwaj, G. (2014). *Social phychology*. Delhi: Pearson.

Billig, M. (2015). The myth of Kurt Lewin and the rhetoric of collective memory in social psychology textbooks. *Theory & Psychology*. 25(6):1-16. DOI: 10.1177/0959354315594255

Burnes, B. (2020). The Origins of Lewin's Three-Step Model of Change. *The Journal of Applied Behavioral Science*. 56(1): 32-59. DOI: https://doi.org/10.1177/0021886319892685

Burnes, B. and Bargal, D. (2017). Kurt Lewin: 70 Years On. *Journal of Change Management*. 17(2): 91-100. DOI: https://doi.org/10.1080/14697017.2017.1299371

Burnes, B. (2004). Kurt Lewin and complexity theories: back to the future? *Journal of Change Mnagement.* 4(4): 309-325. DOI: 10.1080/1469701042000303811

Britannica, T. Editors of Encyclopaedia (2016, May 3). *Field theory*. *Encyclopedia Britannica*. https://www.britannica.com/science/field-theory-psychology

Callaghan, J. and Lazard, L. (2011). *Critical Thinking in Psychology - Social Psychology*. UK: Learning Matters.

Cherry, K. (2020). Kurt Lewin and Modern Social Psychology. *Very-Well Mind*. Updated: November 24, 2020. Retrieved from: https://www.verywellmind.com/kurt-lewin-biography-1890-1947-2795540

Cherry, K. (2020a). An Overview of Social Psychology. *Very-Well Mind.* Updated: July 5, 2020. Retrieved from: https://www.verywellmind.com/social-psychology-4157177

Coghlan, D., and Jacobs, C. (2005). Kurt Lewin on Reeducation: Foundations for Action Research. *The Journal of Applied Behavioral Science*. 41(4): 444-457. DOI: https://doi.org/10.1177/0021886305277275

Coghlan, D and Brannick, T (2003). Kurt Lewin: The 'Practical Theorist' for the 21st Century. *Irish Journal of Management*. 24(2): 31-37.

Crip, R.J. and Tunner, R.N. (2010). *Essential Social Psychology*. New Delhi. SAGE Publication.

Cummings, S., Bridgman, T., and Brown, K.G. (2015). Unfreezing change as three steps: Rethinking Kurt Lewin's legacy for change management. *Human Relations*. 69(1): 33-60. SAGE Journals. DOI: https://doi.org/10.1177/0018726715577707

Famous Psychologists. (2014). FamousPsychologists.org. Retrieved from: https://www.famouspsychologists.org/

Franzoi, S.L. (2006). *Social Psychology*. New York: McGraw-Hill Higher Educaation.

Gencer, H. (2019). Group Dynamic and Behavior. *Universal Journal of Education Research*. 7(1): 223-229. DOI: 10.13189/ujer.2019.070128

Hodgetts, D., Drew, N., Sonn, C., Stolte, O., Nikora, L.W. and Curtis, C. (2010). *Social Psychology and Everyday Life*. New York: Palgrave Macmillan.

Introduction to Social Psychology: Kurt Lewin & Modern Uses. (2011, October 22). Retrieved from https://study.com/academy/lesson/intro-to-social-psychology.html.

Jha, S. (2013). *Social psychology*. Uttar Pradesh: Axis Book (Pvt) Limited.

Kurt Lewin: Experiments, Theories & Contributions. (2018, February 14). Retrieved from https://study.com/academy/lesson/kurt-lewin-experiments-theories-contributions.html.

Leadership Success. (2021). Leadership Styles - Lewin's leadership styles. Retrieved from: https://www.leadershipsuccess.co/leadership-styles/lewins-leadership-styles

Lewin, K. (1935). *A Dynamic Theory of Personality: Selected Papers*. New York & London: McGraw-Hill Book Company.

Lewin, K. (1939). Field Theory and Experiment in Social Psychology: Concepts and Methods. American Journal of Sociology. 44(6): 868-896. The University of Chicago Press. JSTOR. URL: https://www.jstor.org/stable/2769418

Lewin, M.A. (1977). Kurt Lewin's View of Social Psychology: The Crisis of 1977 and the Crisis of 1927. *Personality and Social Psychology Bulletin*. 3(2): 159-172. SAGE Journals. DOI: https://doi.org/10.1177/014616727700300203

Marrow, A. J. (1977). *The practical theorist: The life and work of Kurt Lewin.* Washington DC: Teachers College Press. https://psycnet.apa.org/record/1978-31671-000

Malim, T. (1997). *Introductory Psychology Series: Social Psychology*. London: Macmillan Press.

Mulder, P. (2012). *Lewin's Change Model*. Retrieved [insert date] from ToolsHero: https://www.toolshero.com/change-management/lewin-change-management-model/

Myers, D.G. (1993). *Social Psychology*. New York: McGraw-Hill.

Riswan, M. (2021). 'Social Psychology: An Introduction'. In: Emimah, S., Sylvia, A.V. and Lavanya, P. (eds.). *Psychology in Action*. Thoothukudi: Annammal Publications. 46-68.

Saxe, L. (2010). Lewin, Kurt (1890-1947). Available at Research Gate. Retrieved from: https://www.researchgate.net/publication/317388452_Lewin_Kurt_1890-1947

Scientific World. (2019). Importance of Social Psychology in Contemporary Society - An Overview. Retrieved from: https://www.scientificworldinfo.com/2019/04/importance-of-social-psychology-in-contemporary-society.html

Segal, M. (1997). *Points of influence: A guide to using personality theory at work*. San Francisco: Jossey-Bass Publishers.

The Psychology Notes HQ. (2021). Kurt Lewin's Psychological Field Theory. Online Notes for Psychology Students. Retrieved from: https://www.psychologynoteshq.com/psychological-field-theory/

Tietz, T. (2016). Kurt Lewin and Formation of Social Psychology. *SciHi Blog*. Retrieved from: http://scihi.org/kurt-lewin/

Warbleton Council. (2021). Kurt Lewin's 3 Types of Leadership Styles. Retrieved from: https://ta.warbletoncouncil.org/estilos-liderazgo-lewin-4949

Wheeler, L. (2008). Kurt Lewin. *Wiley Online Library*. First Publication (21, July 2008). WILEY. DOI: https://doi.org/10.1111/j.1751-9004.2008.00131.x